கழக வெளியீடு — ௬௬

உ

அதிவீரராமபாண்டியர்

அருளிய

# வெற்றிவேற்கை

யென்னும்

# நறுந்தொகை

அண்ணமலைப் பல்கலைக் கழகத்
தமிழ் விரிவுரையாளராயிருந்த

நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார்

எழுதிய

பதவுரை விளக்கவுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

*Fourth Edition :* *June 1941*
*Fifth Edition :* *Sept. 1944*
*Sixth Edition :* *March 1947*

*(Copy-Right)*

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI : & : MADRAS.

Q. H. Ms. 95 B.—May 1948

The Royal Printing Works, Madras.

# முகவுரை

**நறுந்தொகை** என்னும் இந் நீதிநூல் அருந்தமிழ்ப் புலமை சான்ற **அதிவீரராமபாண்டியரால்** இயற்றப்பட்டது. இவர் **கொற்கை** நகரத்திலிருந்து அரசு புரிந்தவரென்று, இந்நூற் பயன் கூறும் பாயிரத்தில் 'கொற்கையாளி' என வருதலால் அறியப்படுகின்றது. கொற்கை, பாண்டி மன்னர்கள் இருந்து அரசுபுரியும் பதிகளி லொன்றாயிருந்த தென்பதைச் **சிலப்பதிகாரத்**திலே 'கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்' எனக் கூறப்பட்டிருத்தலானும், பிறவிடத்தும் 'கொற்கைச் செழியர்' என வருதலானும் அறியலாகும். இப்பதி பாண்டிநாட்டில் முத்துக் குளிக்கும் துறைமுகங்களில் ஒன்றாயும் இருந்தது. **சிறுபாணாற்றுப்படையில்,** 'உப்பு வாணிகரின் சகட வொழுங்கோடு கொற்கைக்கு வந்த மந்திகள் அங்குள்ள முத்துக்களைக் கிளிஞ்சியின் வயிற்றிலடக்கி உப்பு வாணிகச் சிறாருடன் கிலுகிலுப்பையாடும்' என்று கொற்கை வருணிக்கப்பட்டிருக்கிறது. அதில், பாண்டியன் 'தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்' எனக் கூறப்பட்டிருத்தலும் அறியற்பாலது. அதிவீரராமபாண்டியர் தென்காசியிலிருந்து அரசு புரிந்தனரெனவும் கூறுவர். இவர் காலம் கி. பி. ௧௧, ௧௨-ம் நூற்றாண்டு எனச் சிலரும், ௧௫-ம் நூற்றாண்டு எனச் சிலரும் கூறுநிற்பர்.

இவர் தமிழில் நிரம்பிய புலமை வாய்ந்தவர். வடமொழிப் புலமையும் உடையவர். தமிழில் இவரியற்றிய நூல்கள் **நைடதம், கூர்ம புராணம், இலிங்க புராணம், காசி காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதிகள், நறுந்தொகை** முதலியனவாம். இவர் தமையனார் **வரதுங்கராம பாண்டிய** ரென்பவர். அவரும் சிறந்த புலவராய்த் தமிழில் **பிரமோத்தர காண்டம்** முதலிய நூல்கள் இயற்றியிருக்கின்றனர். அவர் மனைவியாரும் சிறந்த புலமையுடையார் எனக் கூறுகின்றனர்.

இனி, இவரியற்றிய நூல்களுள்ளே **நைடதமானது** இலக்கியப் பயிற்சிக்குச் சிறந்த நூலாகக்கொண்டு தமிழ்மக்கள் பல்லோரானும் பாராட்டிப் படிக்கப்படுகின்றது. திருக்கருவையில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான்மீது இவர் பாடிய **வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி** என்பன பத்திச்

சுவை ததும்பும் துதி நூல்களாம். நறுந்தொகை யென்பது இளைஞர் பலராலும் படிக்கப்படுகின்ற நீதிநூல்களி லொன்ருக வுளது. இந்நூற்குப் பெயர் இதுவே யென்பது 'நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னல்' எனப் பாயிரத்திற் கூறி யிருத்தலாற் பெறப்படும். அச்சூத்திரம் 'வெற்றிவேற்கை' என்று தொடங்கி யிருப்பதுகொண்டு இதனை அப்பெயரானும் வழங்கி வருகின்றனர்.

நறுந்தொகை என்பது நல்லனவாகிய நீதிகளின் தொகை எனப் பொருள்படும். இதனல், பழைய நூல்களிலுள்ள நல்ல நீதிகள் பல இந்நூலுள்ளே தொகுத்து வைக்கப்பட்டன என அறியலாகும். இதிலுள்ள நீதிகளெல்லாம் தொன்னூல்களிற் காணப்படுவனவே யெனினும், ஒருசில, **புறநானூறு, நாலடியார்** முதலியவற்றின் செய்யுட்களோடு சொல்லினும் பொருளினும் பெரிதும் ஒற்றுமையுற்று விளங்குகின்றன. அவை உரையில் அங்கங்கே காட்டப்பட்டுள்ளன. இந்நூல் முன் பலரால் பதிக்கப்பட்டிருக்கிறது. அப்பதிப்புக்கள் ஒன்று ஒன்றனோடு பெரிதும் வேறுபட்டுள்ளன. அவற்றிற் காணப்படும் **பாடபேதங்கள்** எண்ணிறந்தன. வாக்கியங்களின் முறையும் பலவாருகப் பிறழ்ச்சியடைந்துள்ளது. 'அதனல்' என்பதுபோலுஞ் சொற்கள் தனிச்சீராக வேண்டாத இடங்களிலெல்லாம் வைக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் இவை பலவற்றையும் கூடியவரையில் திருத்தம் செய்து, இன்றியமையாத பாடபேதங்களையும் காட்டி, **பதவுரை பொழிப்புரை**களுடன், **விசேடக்குறிப்பு**க்களும் திருந்த எழுதியிருப்பது காணலாகும். 'வாழிய நலனே வாழிய நலனே' என்னும் வாக்கியம் சில பதிப்புக்களில் ஓரியைபுமின்றி நூலின் நடுவே வைக்கப்பட்டுள்ளது. ஒரு பதிப்பில் அஃது இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது. கோயி ஞன்மணி மாலையிற் **பட்டினத்தடிகள்** 'அருளு வாழி அருளு வாழி' என ஒரு பாட்டின் முதலில் வாழ்த்தி யிருப்பதும், மற்றும் முதற்கண் வாழ்த்துக் கூறுதல் மரபாயிருந்து வருவதுங்கொண்டு, இப்பதிப்பில் வாழ்த்தினை முதலில் அமைத்துளேம்.

இங்ஙனம் :

**ந. மு. வேங்கடசாமி.**

# நறுந்தொகை

## கடவுள் வாழ்த்து

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

## நூற்பயன்

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னாற்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

## வாழ்த்து

வாழிய நலனே வாழிய நலனே.

## நூல்

க. எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்.
உ. கல்விக் கழகு கசடற மொழிதல்.
ங. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
ச. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.
ரு. [1]மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
சா. [2]வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.

(பா-ம்) 1. மன்னர்க் கழகு. 2. வணிகர்க் கழகு.

எ. [1]உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்
அ. மந்திரிக் கழகு [2]வரும்பொரு ளுரைத்தல்.
கூ. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
க௦. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
கக. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
கஉ. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்
கங. விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.
கச. [3]அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
கரு. [4]வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.
கசு. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
கஎ. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க்[5]கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
கஅ. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
ககூ. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
உ௦. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.
உக. உற்றோ ரெல்லா முறவின ரல்லர்.
உஉ. கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.
உங. அடினுமா வின்பால் தன்சுவை குன்றாது.
உச. சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது.
உரு. அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மாறாது.

---

(பா-ம்) 1. உழவர்க் கழகே ருழுதூண். 2. வருபொருள்.
3. அறிவோர்க்கு. 4. வறியோர்க்கு.
5. கயத்துள்.

௨௬. புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.
௨௭. கலக்கினும் தண்கடல் சேறா காது.
௨௮. அடினும்பால் பெய்துகைப் பறுதுபேய்ச் சுரைக்காய்.
௨௯. ஊட்டினும் பல்விரை யுள்ளிகம ழாதே.
௩0. பெருமையுஞ் சிறுமையுந்[1]தான்றர வருமே
௩௧. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
௩௨. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.
௩௩. நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
௩௪. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
௩௫. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.
௩௬. கல்லா வொருவன் குலநலம் [2]பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
௩௭. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே.
௩௮. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் [3]கற்றோரை மேல்வரு கென்பர்.
௩௯. அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்
௪0. அச்சமுள் ளடக்கி யறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.
௪௧. யானைக் கில்லை தானமுந் தருமமும்.
௪௨. பூனைக் கில்லை தவமுந் தயையும்.

(பா-ம்) 1. தாந்தர. 2. பேசின்.
3. கற்றோரை வருக வென்பார்.

சங. ஞானிக் கில்லை யின்பமுந் துன்பமும்.

சச. சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்.

சரு. முதலைக் கில்லை நீத்து நிலையும்.

சசு. அச்சமு நாணமு மறிவிலோர்க் கில்லை.

சஎ. நாளுங் கிழமையு நலிந்தோர்க் கில்லை.

சஅ. கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை.

சகூ. உடமையும் வறுமையு மொருவழி நில்லா.

ருO. குடை நிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.

ருக. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்.

ருஉ. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினு மாளுவர்.

ருங. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்.

ருச. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாயினு மாகும்.

ருரு. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருங் கூடி
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.

ருசு. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துங் கொழுநரைத் தழீஇ
உடுத்த வாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

ருஎ. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.

ருஅ. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.

ருகூ. நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை யில்லில் லோர்க்கே

சுO. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

௬௧. குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.

௬௨. ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகவஞ் சும்மே.

௬௩. கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே.

௬௪. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேய நன்றே.

௬௫. காலையு மாலையு நான்மறை யோதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே.

௬௬. குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை யிறைவனு மூர்க்கனும் பதரே.

௬௭. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

௬௮. வித்து மேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.

௬௯. தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
[1]பின்பவட் பாராப் பேதையும் பதரே.

௭௦. [2]தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்
பிறர்மனைக் கேகும் பேதையும் பதரே.

௭௧. தன்னா யுதமுந் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

௭௨. வாய்ப்பறை யாகவு நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்

௭௩. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

௭௪. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமை
பொய்போ லும்மே பொய்போ லும்மே.[யாற்

(பா-ம்.) 1. பின்பவட் பேணு. 2. தனியே யிருத்தி.

எரு. இருவர்தஞ் சொல்லையு மெழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த வுரையா ராயின்
[1]மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தா
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.

எசு. பழியா வருவது மொழியா தொழிவது.

எஎ. சுழியா வருபுன லிழியா தொழிவது.

எஅ. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

எகூ. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

அ0. எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே.

அக. வழியே யேகுக வழியே மீளுக.

அஉ. இவைகா ணுலகிற் கியலா மாறே.

———

(பா-ம்.) 1. மனுநெறி முறையின்.

# நறுந்தொகை

## மூலமும் உரையும்

---

## கடவுள் வாழ்த்து

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

(பதவுரை.) பிரணவம் - பிரணவ மந்திரத்தின், பொருள் ஆம் - அருத்தமாகிய, பெருந்தகை - பெருந்தன்மையுடைய, ஐங்கரன் - ஐந்து கைகளை யுடையவராகிய விநாயகக் கடவுளின், சரணம் - திருவடியாகிய, அற்புதம் - அதிசயமிகுந்த, மலர் - செந்தாமரைமலரை, தலைக்கு அணிவோம் - தலையில் சூடிக்கொள்வோம் என்றவாறு.

(பொழிப்புரை.) பிரணவ மந்திரத்தின் பொருளாகிய விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்குவோம் என்றவாறு.

பிரணவம் எல்லா மந்திரங்களுக்கும், வேதத்திற்கும் முதலாக வுள்ளது. யாம் என்னும் எழுவாய் தொக்குநின்றது. ஏ - ஈற்றசை.

## நூற்பயன்

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னல்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

(பத.) கொற்கை - கொற்கை யென்னும் நகரை, ஆளி - ஆள்பவனும், குலசேகரன் - தன் குலத்திற்கு முடிபோல்வனும் ஆகிய, வெற்றி வேல் கை - வெற்றி பொருந்திய வேலினை யேந்திய கையையுடைய, வீரராமன் - அதிவீர ராமபாண்டியன், புகல் - சொல்லிய, நல் தமிழ் தெரிந்த - நல்ல தமிழில் விளக்கமுற்ற, நறுந்தொகை தன்னால் - நறுந்தொகை யென்னும் இந்நீதி

நூலால், குற்றம் களைவோர் - குற்றத்தைப் போக்குவோர், குறைவு இலாதவர் - சிறுமை இல்லாதவராவர் (எ - று.)

(பொழி.) கொற்கைநகரதிபனும் குலத்திற்கு மகுடம் போன்றவனுமாகிய அதிவீர ராம பாண்டியன் கூறிய நறுந்தொகையென்னும் இந்நீதிநூலைக் கற்றுக் குற்றத்தைப் போக்கிக்கொள்வோர் ஒரு குறைவும் இல்லாதவராவர் (எ - று.)

நறுந்தொகை யென்பதற்கு நல்ல நீதிகளைத் தொகுத்திருப்பது என்பது பொருள். இதுவே இந்நூலின் பெயர். இச்செய்யுளின் முதலில் 'வெற்றி வேற்கை' என்னுந் தொடர் இருத்தலால், அதனாலும் இந்நூலை வழங்குவர். ஏ - ஈற்றசை.

## வாழ்த்து

வாழிய நலனே வாழிய நலனே.

(பத.) நலன் - எல்லா நன்மைகளும், வாழிய - வாழ்க, நலன் - எல்லா நன்மைகளும், வாழிய - வாழ்க.

(பொழி.) எல்லா நலங்களும் வாழவேண்டும்; எல்லா நலங்களும் வாழவேண்டும்.

நலங்களாவன; மழை, பயிர், பசு, அறம் முதலியன. நன்மை வாழவேண்டு மென்றமையால் தீமை ஒழிய வேண்டு மென்பதுமாயிற்று. மகிழ்ச்சியால் இருமுறை கூறினர். ஏ - அசை.

---

## நூல்

க. எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்.

(பத.) எழுத்து - எழுத்துக்களை, அறிவித்தவன் - கற்பித்த ஆசிரியன், இறைவன் ஆகும் - கடவுள் ஆவான்.

(பொழி.) ஒருவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் அவனுக்குத் தெய்வமாவான்.

எழுத்து முதலாகக் கற்பிக்க வேண்டுதலின் கல்வியை எழுத்து என்றார். ஆசிரியனைத் தெய்வமாகக் கருதி வணங்கவேண்டு மென்பது கருத்து.

## ௨. கல்விக் கழகு கசடற மொழிதல்.

(பத.) கல்விக்கு - (ஒருவன் கற்ற) கல்விக்கு, அழகு - அழகாவது, கசடு அற - குற்றம் நீங்க, மொழிதல் - (தான் கற்றவை களைச்) சொல்லுதல்.

(பொழி.) ஒருவன் கற்ற கல்விக்கு அழகாவது தான் கற்றவை களைக் குற்றமறச் சொல்லுதல்.

கசடு - ஐயம், திரிபு என்பன. ஒருவன் தான் கற்றவைகளை ஐயம் திரிபு இன்றியும், திருத்தமாகவும் பிறருக்குச் சொல்லவேண் டும் என்பதாம்.

## ௩. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.

(பத.) செல்வர்க்கு - பொருளுடையவர்க்கு, அழகு - அழகாவது, செழும் கிளை - நல்ல சுற்றத்தை, தாங்குதல் - பாது காத்தல்.

(பொழி.) செல்வ முடையோர்க்கு அழகாவது, சுற்றத்தார் வறுமையுற்ற பொழுது அவரைப் பாதுகாத்தல்.

கிளைபோன் றிருத்தலின் சுற்றம் கிளை யெனப்படும். செழுங் கிளை யென்பது நல்ல உறவு என்றும்; தமக்கு அழகைச் செய்யும் உறவு என்றும் பொருள்படும்.

## ௪. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.

(பத.) வேதியர்க்கு - மறையோருக்கு, அழகு - அழகாவன, வேதமும் - வேதம் ஓதுதலும், ஒழுக்கமும் - நல்லொழுக்கம் குன்றுதிருத்தலும் ஆம்.

(பொழி.) வேதத்தை மறவாமல் ஓதுதலும், ஒழுக்கத்திற் குன்றாமையும் அந்தணர்க்கு அழகாம்.

வேதத்தை மறந்தவரும், நல்லொழுக்க மில்லாதவரும் அந்தண ராகார் என்பதாம்.

## ௫. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.

(பத.) மன்னவர்க்கு - அரசருக்கு, அழகு - அழகாவது, செங் கோல் முறைமை - நீதி செலுத்தும் முறைமையாம்.

(பொழி.) அரசருக்கு அழகாவது நீதி செலுத்தும் இயல்பாம்.

நீதியானது செவ்விய கோல்போன் றிருத்தலின், அது செங் கோல் எனப்படும். தமது நாட்டை நீதியுடன் ஆளாதவர் அரச ராகார் என்பதாம்.

௬. வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.

(பத.) வைசியர்க்கு - வணிகர்க்கு, அழகு - அழகாவது, வளர் பொருள் - வளர்கின்ற பொருளை, ஈட்டல் - தேடுதல்.

(பொழி.) வாணிகர்க்கு அழகாவது வளர்கின்ற பொருளைச் சேர்த்தல்.

வளர்தலாவது மேன்மேற் கிளைத்தல்.

௭. உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.

(பத.) உழவர்க்கு - வேளாளர்க்கு, அழகு - அழகாவது, இங்கு - இந்நிலத்தில், உழுது - உழுது பயிர் செய்து, ஊண் - உண்டு வாழ்தலை, விரும்பல் - இச்சித்தல்.

(பொழி.) வேளாளர்க்கு அழகாவது பயிர்செய்து உண்டலை விரும்புதல்.

௮. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.

(பத.) மந்திரிக்கு - அமைச்சனுக்கு, அழகு - அழகாவது, வரும்பொருள் - (மேல்) வருங் காரியத்தை, உரைத்தல் - (முன்னறிந்து) சொல்லுதல்.

(பொழி.) அமைச்சனுக்கு அழகாவது மேல் வருங் காரியத்தை முன்னறிந்து அரசனுக்குச் சொல்லுதல்.

௯. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.

(பத.) தந்திரிக்கு - படைத்தலைவனுக்கு, அழகு - அழகாவன, தறுகண் - அஞ்சாமையும், ஆண்மை - வீரமும் ஆம்.

தந்திரம் - சேனை. தந்திரி - சேனையை உடையவன்.

௧0. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.

(பத.) உண்டிக்கு - உணவிற்கு, அழகு - அழகாவது, விருந்தோடு - விருந்தினருடன், உண்டல் - உண்ணுதல்.

(பொழி.) உணவுண்டலுக்கு அழகாவது வந்த விருந்தினருடன் புசித்தல்.

விருந்தினர் - புதியராய் வருகின்றவர், பரதேசிகள்.

## கக. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.

(பத.) பெண்டிர்க்கு - மகளிர்க்கு, அழகு - அழகாவது, எதிர் பேசாது - (கணவன் சொல்லுக்கு) எதிர் பேசாமல், இருத்தல் - அடங்கியிருத்தல்.

(பொழி.) மாதர்களுக்கு அழகாவது கணவனோடு எதிர்த்துப் பேசாது அடங்கி யிருப்பது.

## கஉ. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.

(பத.) குலமகட்கு - குலப்பெண்ணுக்கு, அழகு - அழகாவது, தன் கொழுநனை - தன் கணவனை, பேணுதல் - வழி படுதல்.

(பொழி.) குலமாதுக்கு அழகாவது, தன் கணவனைப் பூசித்தல்.

குலமகள் - ஒருவனுக்கு உரியளாய் இல்லறம் நடாத்தும் நற்குடிப் பிறந்த பெண். பேணுதல் என்பதற்கு உண்டி முதலிய வற்றால் உபசரித்தல் என்றும் பொருள் சொல்லலாம்.

## கங. விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.

(பத.) விலைமகட்கு - விலைமாதுக்கு, அழகு - அழகாவது, தன் மேனி - தன் உடம்பை, மினுக்குதல் - மின்னச் செய்தல்.

(பொழி.) பொதுமகளுக்கு அழகாவது, தன் சரீரத்தை மின்னச் செய்தல்.

பொருள் கொடுப்பார்க்கு உரியளாதலின் பரத்தை விலைமகள் எனப்படுவள். மினுக்குதல் - ஆடை அணிகளாலும், மஞ்சள் முதலிய பூச்சுக்களாலும் விளங்கச்செய்வது.

## கச. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.

(பத.) அறிஞர்க்கு - அறிவுடையோருக்கு; அழகு - அழகாவது, கற்று - (கற்க வேண்டிய நூல்களை யெல்லாம்) கற்று, உணர்ந்து - (அவற்றின் பொருள்களை) அறிந்து, அடங்கல் - அடங்கி யிருத்தல்.

(பொழி.) அறிவுடையோருக்கு அழகாவது நூல்களைக் கற்றுணர்ந்து அடங்கியிருத்தல்.

அடங்கல் - செருக்கின்றி யிருத்தல்; மனம் அடங்குதல்; நூல்களிற் கூறியபடி நடத்தல்.

கரு. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

(பத.) வறிஞர்க்கு - வறுமை யுடையோருக்கு, அழகு - அழகாவது, வறுமையில் - அவ் வறுமைக் காலத்தும், செம்மை - செம்மை யுடையராதல்.

(பொழி.) வறியோர்க்கு அழகாவது வறுமையுற்ற அக் காலத்தும் செம்மை குன்றாதிருத்தல்.

செம்மையாவது மானத்தை விட்டு இரவாமலும், தீயன செய்யாமலும் இருத்தல்.

கசு தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.

(பத.) பனையின் - பனைமரத்தின், தேம்படு - மதுரம் பொருந்திய, திரள் - திரண்ட, பழத்து - கனியில் உள்ள, ஒரு விதை - ஒரு வித்தானது, வான் உற - ஆகாயத்தைப் பொருந்தும்படி, ஓங்கி - உயர்ந்து, வளம் பெற - செழுமை உண்டாக, வளரினும் - வளர்ந்தாலும், ஒருவர்க்கு - ஒருவர்க் காயினும், இருக்க - இருப்பதற்கு, நிழல் ஆகாது - நிழலைத் தராது.

(பொழி.) சுவை பொருந்திய பெரிய பனங்கனியிலுள்ள விதையானது முளைத்து வானமளாவ வளத்துடன் வளர்ந்தாலும் ஒருவரேனும் தங்கியிருக்க நிழலைத் தராது.

உருவத்தாற் பெரியவரெல்லாம் பெருமை யுடையவராகார் என்னுங் கருத்தை அடக்கிக்கொண் டிருப்பது இது. தேம்பழம் எனக் கூட்டுக. விதை முளைத்து வளரினும் அது நிழலாகாது என விரித்துக் கொள்க. தொல்காப்பிய இலக்கணப்படி பனை முதலிய புறவயிரம் உள்ளவற்றிற்குப் புல் என்று பெயர். ஒருவர்க்கும் - என்னும் உம்மை தொக்கது. ஏ - ஈற்றசை.

கஎ. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

(பத.) ஆலின் - ஆலமரத்தின், தெள்ளிய - தெளிந்த, சிறு பழத்து - சிறிய கனியிலுள்ள, ஒரு விதை - ஒரு வித்தானது,

தெள் நீர் - தெளிந்த நீரையுடைய, கயத்து - குளத்திலுள்ள, சிறு மீன் - சிறிய மீனினது, சினையினும் - முட்டையைக் காட்டிலும், நுண்ணிதே ஆயினும் - சிறியதே யானாலும், (அது), அண்ணல் - பெருமை பொருந்திய, யானை - யானையும், அணி - அலங்கரிக்கப் பட்ட. தேர் - தேரும், புரவி - குதிரையும், ஆள் - காலாளும் (ஆகிய), பெரும் படையொடு - பெரிய சேனையோடு, மன்னர்க்கு - அரசருக்கும், இருக்க - தங்கியிருப்பதற்கு, நிழல் ஆகும் - நிழலைத் தரும்.

(பொழி.) சிறிய ஆலம்பழத்திலுள்ள விதையானது சிறிய மீனின் முட்டையைப் பார்க்கிலும் சிறியதாயிருப்பினும், அது முளைத்து வளர்ந்து நால்வகைச் சேனையுடன் கூடிய அரசரும் தங்கியிருக்க நிழலைத் தரும்.

உருவத்தாற் சிறியவரெல்லாம் சிறுமையுடையவராகாது பெருமையுடையவருமாவர் என்னும் கருத்தை அடக்கிக் கொண்டிருப்பது இது. தெள்ளிய பழத்து என்றும், விதை நுண்ணிதே யாயினும் என்றும் கூட்டிக் கொள்க. அது முளைத்து வளர்ந்து நிழலாகும் என விரித்துக்கொள்க. மன்னர்க்கும் என்னும் உம்மை தொக்கது. நிழலாகும்மே என்பதில், ம் - விரித்தல் விகாரம்; ஏ - ஈற்றசை.

கஅ. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.

(பத.) பெரியோர் எல்லாம் - (உருவத்தால்) பெரியவரெல்லாரும், பெரியரும் அல்லர் - பெருமையுடையவரும் ஆகார்.

(பொழி.) உருவத்தாற் பெரியவரெல்லாரும் பெருமையுடையவராகார்.

பெரியோர் என்பதற்கு வயதிற் பெரியவரென்றும், செல்வத்திற் பெரியவரென்றும் பொருள் சொன்னாலும் பொருந்தும். அறிவினாலும், பிறர்க்கு உதவிசெய்தல் முதலியவற்றாலும் பெரியவரே பெருமையுடையவ ரென்க. பெரியரும் என்பதிலுள்ள உம்மை பின்வரும் சிறியரும் என்பதைத் தழுவியிருக்கிறது. இங்கே கூறிய விசேட வுரைகளை மேல்வரும் தொடர்க்கு மாற்றி யுரைத்துக் கொள்க.

கக. *சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

* சில பதிப்பில் 'சிறியோர்' என்பது முன்னும், "பெரியோர்" என்பது பின்னும் காணப்படுகின்றன.

(பத.) சிறியோர் எல்லாம் - (உருவத்தால்) சிறியவரெல்லாரும், சிறியரும் அல்லர் - சிறுமையுடையவரும் ஆகார்.

(பொழி.) உருவத்தாற் சிறியவரெல்லாரும் சிறுமையுடையவராகார்.

உ௦. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.

(பத.) பெற்றோர் எல்லாம் - பெறப்பட்டவர்களெல்லாரும் பிள்ளைகள் அல்லர் - (நல்ல) பிள்ளைகளாகார்.

(பொழி.) ஒருவர் பெற்ற பிள்ளைகளெல்லாரும் நல்ல பிள்ளைகளாகார்.

அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்ட பிள்ளைகளே பிள்ளைகள் என்று சொல்வதற்குத் தகுதியுடையவர்கள் என்க.

உக. உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.

(பத.) உற்றோர் எல்லாம் - உறவினரெல்லோரும், உறவினர் அல்லர் - (நல்ல) உறவினராகார்.

(பொழி.) உறவினரனைவரும் சிறந்த உறவினராகார். இன்ப துன்பங்களில் ஈடுபட்டிருக்கும் சுற்றத்தாரே உறவினர் என்று சொல்வதற்குத் தகுதியுடையோர் என்க.

உஉ. கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

(பத.) கொண்டோர் எல்லாம் - கொள்ளப்பட்ட மனைவியரெல்லாரும், பெண்டிரும் அல்லர் - (நல்ல) மனைவியருமாகார்.

(பொழி.) மணஞ்செய்து கொள்ளப்பட்ட மனைவியரெல்லாரும் நல்ல மனைவியருமாகார்.

கணவன் குறிப்பறிந்து பணிசெய்து நடப்பவளே மனைவியென்று சொல்லுவதற்குத் தகுதியுடையவள் என்க. பெண்டிரும் என்பதிலுள்ள உம்மை மேல்வந்த பிள்ளைகள், உறவினர் என்பவற்றைத் தழுவியது.

உங. அடினுமா வின்பால் தன்சுவை குன்றாது.

(பத.) அடினும் - காய்ச்சினாலும், ஆவின் பால் - பசுவின் பால், தன் சுவை - தனது மதுரம், குன்றாது - குறையாது.

(பொழி.) பசுவின் பாலை வற்றக் காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது (மிகும்).

இதுமுதல் ஐந்து வாக்கியங்கள் பெரியோர்க்கு எவ்வளவு துன்பம் செய்தாலும் அவர்கள் தம் பெருமைக் குணத்தைக் கைவிடார் என்னும் கருத்தை அடக்கிக்கொண்டிருக்கின்றன.

உச. சுடினுஞ் செம்பொன் றன்னொளி கெடாது.

(பத.) சுடினும் - சுட்டாலும், செம்பொன் - சிவந்த பொன்னனது, தன் ஒளி - தனது ஒளி, கெடாது - அழியாது.

(பொழி.) தங்கத்தைத் தீயிலிட்டுச் சுட்டாலும் அதன் ஒளி கெடாது (மிகும்).

உரு. அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மறாது.

(பத.) அரைக்கினும் - அரைத்தாலும், சந்தனம் - சந்தனக் கட்டையானது, தன் மணம் - தனது வாசனை, அறாது - நீங்காது.

(பொழி.) சந்தனக் கட்டையை அரைத்தாலும் அதன் மணம் நீங்காது (மிகும்).

உசு. புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.

(பத.) புகைக்கினும் - புகையச் செய்தாலும், கார் அகில் - கரிய அகிற்கட்டையானது, பொல்லாங்கு கமழாது - தீ நாற்றம் வீசாது.

(பொழி.) அகிற் கட்டையை நெருப்பிலிட்டுப் புகைத்தாலும் அது தீ நாற்றம் நாறாது (நன்மணங் கமழும்). பொல்லாங்கு - தீமை; அது தீய நாற்றத்தைக் குறிக்கிறது.

உஎ. கலக்கினும் தண்கடல் சேறா காது.

(பத.) கலக்கினும் - கலக்கினாலும், தண் கடல் - குளிர்ந்த கடலானது, சேறு ஆகாது - சேறாகமாட்டாது.

(பொழி.) கடலைக் கலக்கினாலும் அது சேறாகாது (தெளிவாகவே யிருக்கும்).

உஅ. *அடினும்பால் பெய்துகைப்
பறாதுபேய்ச் சுரைக்காய்.

(பத.) பால் பெய்து - பால் வார்த்து, அடினும் - சமைத்தாலும், பேய்ச்சுரைக்காய் - பேய்ச் சுரைக்காயானது, கைப்பு அறாது - கசப்பு நீங்காது

* 'அடினும்' என்னும் இவ்வாக்கியமும், 'ஊட்டினும்' என மேல் வரும் வாக்கியமும சில பதிப்புக்களிலேயே உள்ளன.

(பொழி.) பேய்ச்சுரைக்காயைப் பால்விட்டுச் சமைத்தாலும் அதன் கசப்பு நீங்காது.

இதுவும், அடுத்துவரும் வாக்கியமும் சிறியோர்க்கு எவ்வளவு நன்மை செய்தாலும் அவர்கள் தம் சிறுமைக் குணத்தைக் கைவிடார் என்னுங் கருத்தை அடக்கிக்கொண் டிருக்கின்றன. இக் கருத்து, "உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும், கைப்பறு பேய்ச்சுரையின் காய்" என நாலடியாரில் வந்துளது. பேய்ச் சுரைக்காய் சுரைக்காயில் ஒரு வகை.

உகூ. ஊட்டினும் பல்விரை யுள்ளிகம ழாதே.

(பத.) பல் விரை - பல வாசனைகளை, ஊட்டினும் ஊட்டி னாலும், உள்ளி - உள்ளிப் பூண்டானது, கமழாது - நன்மணம் வீசாது.

(பொழி.) உள்ளிப் பூண்டுக்குப் பல வாசனைகளை ஊட்டி னாலும் அது நறுமணங் கமழாது (தீநாற்றமே வீசும்.) ஏ - அசை.

௩0 பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே.

(பத.) பெருமையும் - மேன்மையும், சிறுமையும் - கீழ்மை யும, தான் தர - தான் செய்து கொள்ளுதலால், வரும் - உண் டாகும்.

(பொழி.) மேன்மையும் கீழ்மையும் தான் செய்யுஞ் செய் கையாலேயே உண்டாகும் (பிறரால் உண்டாவதில்லை). ஏ - அசை.

௩க. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

(பத.) சிறியோர் செய்த - சிற்றறிவுடையோர் செய்த, சிறு பிழை எல்லாம் - சிறிய குற்றங்க ளெல்லாவற்றையும், பெரியோர் ஆயின் - மேலோராயிருப்பின், பொறுப்பது - பொறுத்துக் கொள் வது, கடன் - முறைமையாம்.

(பொழி.) சிற்றறிவுடையோர் செய்த சிறிய பிழைகளைப் பெரியோர் பொறுத்துக்கொள்வது கடமை. பொறுமையினா லேயே பெருமை அறியப்படும் என்க. ஏ - அசை.

௩உ. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

(பத.) சிறியோர் - கீழோர், பெரும் பிழை - பெரிய குற்றங் களை, செய்தனர் ஆயின்-செய்தாரானால், பெரியோர் - மேலோர்,

அப் பிழை - அக் குற்றங்களை, பொறுத்தலும் - பொறுத்துக் கொள்ளுதலும், அரிது - அருமையாம்.

(பொழி.) சிறியோர்கள் பெரும்பிழைகளைச் செய்தால் பெரியோர் அவற்றைப் பொறுத்தலும் அருமையாம்.

பெரியோர் பொறுப்பரென்று கருதி அவரிடத்துப் பெரும் பிழை செய்தல் கூடாது என்க. ஏ - அசை.

கூகூ. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

(பத.) நூறு ஆண்டு - நூறு வருடம், பழகினும் - பழகி னுலும், மூர்க்கர் - கீழ்மக்களுடைய, கேண்மை - நட்பானது, நீர்க்குள் - நீரிலுள்ள, பாசிபோல் - பாசியைப்போல, வேர் கொள் ளாது - வேரூன்ருது.

(பொழி.) எத்தனை காலம் பழகினுலும் கீழ்மக்களுடைய நட்பு நீர்ப்பாசி வேரூன்ருமைபோல வேரூன்ருது. ஏ - அசை.

கூச. *ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

(பத.) ஒருநாள் - ஒரு தினம், பழகினும் – பழகினுலும், பெரியோர் - மேன்மக்களுடைய, கேண்மை - நட்பானது, இரு நிலம் பிளக்க - பெரிய பூமி பிளக்கும்படி, வேர் வீழ்க்கும் - வேரூன் றப் பெறும்.

(பொழி.) ஒருநாட் பழகினும் மேலோருடைய நட்பானது பூமி பிளக்கும்படி வேரூன்றி நிற்கும்.

நட்பை மரமாக உருவகப்படுத்தி 'இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்' என்ருர். பின் சலித்தலின்றி நிலைபெறு மென்பதா யிற்று. ம் - விரித்தல் விகாரம். ஏ - அசை.

கூரு. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

(பத.) கற்கை நன்று கற்கை நன்று - (நூல்களைக்) கற்றல் நல்லது கற்றல் நல்லது, பிச்சை புகினும் - பிச்சைக்குப் போனு லும், கற்கை நன்று - கற்றல் நல்லது.

(பொழி.) பிச்சையெடுத்தாலும் கல்வி கற்பது நல்லது.

வற்புறுத்துவதற்குப் பலமுறை கூறினர். ஏ - மூன்றும் அசை ; தேற்றமும் ஆம்.

கசு. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

(பத.) கல்லா ஒருவன் - கல்வி கல்லாத ஒருவன், குல நலம் - தனது குலத்தின் மேன்மையை, பேசுதல் - சொல்லுதல், நெல்லினுள் பிறந்த - நெற்பயிரில் உண்டாகிய, பதர் ஆகும் - பதடி யாகும்.

(பொழி.) கல்லாதவன் தன் குலத்தின் மேன்மையைப் பாராட்டும் வார்த்தை பதர்போலப் பயனற்றதாகும்.

பேசுதல் வீண். அவன் பதராகும் எனச் சொற்கள் வருவித்து முடித்தலுமாம். நெற்பயிர் நற்குடிக்கும், பதர் நற்குடிப் பிறந்த கல்லாதவனுக்கும் உவமைகளாம். ம் - விரித்தல் விகாரம்.

கஎ. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே.

(பத.) நாற்பால் - நான்கு வகையான, குலத்தில் - குலங்களில், மேற்பால் ஒருவன் - உயர் குலத்திற் பிறந்த ஒருவன், கற்றிலன் ஆயின் - கல்லாதவனானால், கீழ் இருப்பவனே - தாழ்ந்த இடத்தில் இருப்பவனே.

(பொழி.) உயர் குலத்திற் பிறந்தவன் கல்லாதவனாயின் தாழ்ந்த இடத்தில் இருக்கத்தக்கவனே.

நாற்பாற் குலம் : அந்தண அரச வணிக வேளாள குலங்கள். இக்கருத்து, "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும், கீழ்ப்பா லொருவன் கற்பின், மேற்பா லொருவனு மவன்கட் படுமே" எனப் புறநானூற்றில் வந்துளது. ஏகாரம், பிரிநிலையும் தேற்றமும் ஆம்.

கஅ. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்.

(பத.) எக்குடி - எந்தக் குலத்தில், பிறப்பினும் - பிறந்திருந்தாலும், யாவரே ஆயினும் - யாராயிருந்தாலும், அக்குடியில் - அந்தக் குலத்தில், கற்றோரை - கல்வி கற்றவரை, மேல் வருக என்பர் - மேலிடத்து வருக என்று அழைப்பார்.

(பொழி.) எக்குலத்திற் பிறந்திருந்தாலும் யாராயிருந்தாலும் கற்றோரை மேல்வருக என்று உபசரித்து அழைப்பார்.

யாவரேயாயினும் என்றது, எந்த நிலைமையினராயினும் என்றபடி. தாழ்ந்த குலத்திற் பிறந்தவராயினும், இளைஞராயி

னும் கற்றோரை அழைப்ப ரென்க. 'வருக வென்பர்' என்பது 'வருகென்பர்' எனத் தொகுத்தது.

௩௯. அறிவுடை ஒருவனை யரசனும் விரும்பும்.

(பத.) அறிவுடை ஒருவனை - கல்வியறிவுடைய ஒருவனை, அரசனும் விரும்பும் - வேந்தனும் விரும்புவான்.

(பொழி.) கல்வியறிவுடையவனை அரசனும் விரும்புவான். "அறிவுடையோனு றரசுஞ் செல்லும்" எனப் புறநானூற்றில் இக்கருத்து வந்துளது. உடைய என்பது உடை என விகாரமாயிற்று.

௪0. அச்சமுள் ளடக்கி யறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.

(பத.) அச்சம் உள் அடக்கி - அச்சத்தை உள்ளே வைத்து, அறிவு அகத்து இல்லா - அறிவு மனத்திலில்லாத, கொச்சை மக்களை - கீழான பிள்ளைகளை, பெறுதலின் - பெறுவதைக் காட்டினும், அக்குடி - அக்குடியிலுள்ளவர், எச்சம் அற்று - சந்ததியில்லாமல், ஏமாந்து இருக்கை - இன்புற்றிருப்பது, நன்று - நல்லது.

(பொழி.) அறிவும் ஆண்மையு மில்லாத மக்களைப் பெறுவதைப்பார்க்கிலும் மகப்பேறில்லாது களித்திருப்பது நன்று.

கொச்சை - கீழ்மை; வெள்ளாடு என்று பொருள்கொண்டு வெள்ளாடுபோலும் மக்கள் என்று கூறுதலுமாம். அப்பிள்ளைகளைப் பெறுதலால் துன்பமே விளையுமாதலின், பெறாது களித்திருப்பது நல்லது என்றார். ஏமாத்தல் - களித்தல். ஏ - அசை.

௪௧. யானைக் கில்லை தானமுந் தருமமும்.

(பத.) யானைக்கு - யானைக்குக் (கை நீண்டிருந்தாலும்) தானமும் - தானஞ் செய்தலும், தருமமும் - அறஞ்செய்தலும், இல்லை - இல்லையாம்.

(பொழி.) யானைக்குக் கை நீண்டிருந்தாலும் அது தானமும் தருமமும் செய்வதில்லை.

தான தருமஞ் செய்பவர்போற் காணப்படுகிறவர்கள் அவை செய்யாமலு மிருப்பர் என்பதாம். தானம் - தக்கோர்க்குப் பொருளை நீருடன் அளிப்பது. தருமம் - வறியவர்க்கு ஈதல் முதலியன.

## சஉ. பூனைக் கில்லை தவமுந் தயையும்.

(பத.) பூனைக்கு - பூனைக்கு (அது கண்மூடி ஒடுங்கியிருந்தாலும்), தவமும் - தவஞ்செய்தலும், தயையும் - (உயிர்களிடத்து) இரக்கம் வைத்தலும், இல்லை - இல்லையாம்.

(பொழி.) பூனை கண்ணை மூடிக்கொண்டு அமைதியா யிருந்தாலும் அது தவஞ்செய்தலும் அருளுடைத்தாதலு மில்லை.

தவவொழுக்கமும், சீவகாருணியமும் உடையவர்போற் காணப்படுகிறவர்கள் அவை யில்லாமலு மிருப்பர் என்பதாம். இவ்விரண்டு வாக்கியங்களும் வேடத்திறைலேயே ஒருவரை மதிக்கலாகாது என்னுங் கருத்தை அடக்கிக்கொண்டிருக்கின்றன.

## சங. ஞானிக் கில்லை யின்பமுந் துன்பமும்.

(பத.) ஞானிக்கு - ஞானமுடையவனுக்கு, இன்பமும் - சுகமும், துன்பமும் - துக்கமும், இல்லை - இல்லையாம்.

(பொழி.) மெய்ஞ்ஞானிக்குச் சுகமும் இல்லை; துக்கமும் இல்லை.

ஞானி இன்ப துன்பங்களை அநுபவிப்பவன்போற் காணப்பட்டாலும் அவன் மகிழ்ச்சியாவது துயரமாவது அடையான் என்க.

## சச. சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்.

(பத.) சிதலைக்கு - செல்லுக்கு, செல்வமும் - செல்வமுடையரென்பதும், செருக்கும் - செருக்குடையரென்பதும், இல்லை - இல்லையாம்.

(பொழி.) செல்வ முடையரென்றும் செருக்குடையரென்றும் பாராமல் கறையான் யாவருடையையும் அரித்துவிடும்.

கீழ்நிலையி லிருப்பவர் பிறருடைய செல்வத்தையோ அதிகாரத்தையோ கண்டு அஞ்சார் என்க. விலையுயர்ந்த ஆடைகளை அரித்துவிடுதலால் செல்லானது செல்வமும் செருக்குமுடையதன்று; அஃது அதன் இயற்கையே என்று பொருள் கூறி, கீழ்மக்கள் தம் அறியாமையாகிய இயற்கையிறைலேயே பிறர்க்கு இடர் விளைப்பர் என்று கருத்துக் கொள்ளுதலும் ஆம்.

சரு. முதலைக் கில்லை நீத்து நிலையும்.

(பத.) முதலைக்கு - முதலைக்கு, நீத்தும் - நீந்தும் நீர் (என்பதும்), நிலையும் - நிலைகொள்ளும் நீர் (என்பதும்), இல்லை - இல்லையாம்.

(பொழி.) நீச்சென்றும் நிலையென்றும் பாராமல் முதலை எவ்வளவு ஆழமாகிய நீரிலும் செல்லும்.

மூர்க்கராயினர் தக்கது தகாதது என்று பாராமல் எவ்வளவு தகாத காரியத்தையும் துணிந்து செய்வர் என்க.

சசா. அச்சமு நாணமு மறிவிலோர்க் கில்லை.

(பத.) அச்சமும் - (தீய தொழிலுக்கு) அஞ்சுதலும், நாணமும் - (பழிக்கு) நாணுதலும், அறிவு இலோர்க்கு - அறிவில்லாதவருக்கு, இல்லை - இல்லையாம்.

(பொழி.) அஞ்சத்தக்க தீய தொழிலுக்கு அஞ்சுதலும், பழிக்கு நாணுதலும் அறிவில்லாதவரிடத்தில் இல்லை.

சஎ. நாளுங் கிழமையு நலிந்தோர்க் கில்லை

பத.) நாளும் - நட்சத்திரமும், கிழமையும் - வாரமும், நலிந்தோர்க்கு - பிணியால் மெலிந்தவர்க்கு, இல்லை - இல்லையாம்.

(பொழி.) நோயால் வருந்தினவர்க்கு நட்சத்திரமும் கிழமையும் இல்லை.

இன்ன நாளில் இன்னது செய்யவேண்டு மென்னும் நியதி நோயுற்றோர்க்குக் கூடா தென்க.

சஅ. கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை.

(பத.) கேளும் - நட்பும், கிளையும் - உறவும், கெட்டோர்க்கு - வறுமையுற்றோர்க்கு, இல்லை - இல்லையாம்.

(பொழி.) வறுமையுற்றோர்க்கு நண்பரும் உறவினரும் இல்லை.

சகூ. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

(பத.) உடைமையும் - செல்வமும், வறுமையும் - தரித்திரமும், ஒருவழி - ஓரிடத்திலே, நில்லா - நிலைத்திரா.

(பொழி.) செல்வமும் வறுமையும் ஓரிடத்திலே நிலைத்திராமல் மாறிமாறி வரும். பின்வருஞ் சில வாக்கியங்கள் இவ்வியல்பை விளக்குவனவாம்.

ருO. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.

(பத,) குடை நிழல் இருந்து - வெண்கொற்றக் குடையின் நிழலில் இருந்து, குஞ்சரம் ஊர்ந்தோர் - யானையை நடாத்திச் சென்ற அரசரும், நடை மெலிந்து - நடத்தலால் தளர்ச்சியுற்று, ஓர் ஊர் - மற்றொரு ஊரை, நண்ணினும் நண்ணுவர் - அடைந்தாலும் அடைவர்.

(பொழி.) யானையின் பிடர்மேல் வெண்கொற்றக் குடை நிழல்செய்ய வீற்றிருந்து அதனைச் செலுத்திச் சென்ற அரசரும் வறுமை யெய்திக் காலால் நடந்து மற்றொரு ஊருக்குச் செல்வினும் செல்வார்.

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்"

என நாலடியாரில் இக்கருத்து வந்துளது.

ருக. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்.

(பத.) சிறப்பும் – (பிறரை யேவிக்கொள்ளும்) தன்மையும், செல்வமும் - பொருளும், பெருமையும் - மேன்மையும், உடையோர் - உடையவரும், அறக்கூழ்ச்சாலை - அறத்திற்குக் கஞ்சி வார்க்கும் சத்திரத்தை, அடையினும் அடைவர் - அடைந்தாலும் அடைவர்.

(பொழி.) பிறரை யேவிக்கொள்ளும் முதன்மையும் செல்வமும் மேன்மையும் உடையவரும் வறியராய் உணவின்றி, அறத்திற்குக் கூழ்வார்க்கும் சத்திரத்தை அடைந்தாலு மடைவர்.

இவ்விரண்டு வாக்கியங்களிலும் உயர்வுசிறப் பும்மை விகாரத்தாற் றொக்கது.

ருஉ. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசரோ டிருந்தர சாளினு மாளுவர்.

(பத.) அறத்து இடு பிச்சை - அறத்திற்கு இடுகின்ற பிச்சையை, கூவி - (கடைத்தலையில் நின்று) கூவி யழைத்து, இரப்போர் - இரக்கும் வறுமையுடையோரும், அரசோடு இருந்து - அரச அங்கங்களோடு கூடியிருந்து, அரசு ஆளினும் ஆளுவர் - அரசாட்சி செய்தாலும் செய்வர்.

(பொழி.) வீடுகள்தோறும் கடைத்தலையில் நின்று கூவி யழைத்துப் பிச்சை ஏற்போரும் செல்வராகி அரச அங்கங்களுடன் கூடி அரசாண்டாலும் ஆளுவர்.

இழிவு சிறப்பும்மை தொக்கது. பின் சிறப்பும்மை தொக்கு வருவனவற்றையும் கண்டுகொள்க.

ருங. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்.

(பத.) குன்று அத்தனை - மலையவ்வளவு, இரு நிதியை - பெரிய திரவியத்தை, படைத்தோர் - படைத்தவரும், அன்றைப் பகலே - (படைத்த) அன்றைக்கே, அழியினும் அழிவர் - வறுமை யுற்றாலும் உறுவர்.

(பொழி.) மலையளவு பெரும்பொருள் பெற்றவரும் பெற்ற அப்பொழுதே அதனை யிழப்பினும் இழப்பர்.

ருச. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாயினு மாகும்.

(பத.) எழுநிலை - எழுநிலைகளுடைய, மாடம் - மாளிகையும், கால்சாய்ந்து - அடியுடன் சாய்ந்து, உக்கு - சிதறுண்டு, கழுதை மேய் - கழுதைகள் மேய்கின்ற, பாழ் ஆயினும் ஆகும் - பாழ்நில மானலும் ஆகும்.

(பொழி.) எழடுக்கு வீடுகளும் சரிந்து வீழ்ந்து துகளாகிக் கழுதைகள் மேயும் பாழ்நில மானலும் ஆகும்.

ருரு. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருங் கூடி
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.

(பத.) பெற்றமும் - எருதுகளும், கழுதையும் - கழுதைகளும், மேய்ந்த அப் பாழ் - மேய்ந்த அப் பாழ்நில மானது, பொன் தொடி - பொன்னலாகிய வளையலை (அணிந்த), மகளிரும் - மாதர்களையும், மைந்தரும் - ஆடவர்களையும், கூடி - பொருந்தி, நெல் பொலி - நெற் குவியல்களையுடைய, நெடு நகர் - பெரிய நகரம், ஆயினும் ஆகும் - ஆனலும் ஆகும்.

(பொழி.) எருதும் கழுதையும் மேய்ந்த அப் பாழ்நிலம் பொன்வளை யணிந்த மாதரையும் மைந்தரையும் உடையதாய் நெற் பொலி மிக்க பெருநகர மாயினும் ஆகும்.

மேல், பாழாயினுமாகும் என்றதைச் சுட்டி 'அப்பாழ்' என்றார். மைந்தர் - புதல்வர் என்னலுமாம். கூட என்பது கூடியெனத் திரிந்ததாகவும் கொள்ளலாம்.

ருசு. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த வாடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

(பத.) மண அணி அணிந்த - மணக்கோலம் பூண்ட, மகளிர் - பெண்கள், ஆங்கே - அப்பொழுதே (அவ்விடத்திலேயே), பிண அணி அணிந்து - (கணவர் இறத்தலால்) பிணத்திற்குரிய கோலத்தைப் பூண்டு, தம் கொழுநரைத் தழீஇ - தமது கணவருடம்பைத் தழுவி, உடுத்த ஆடை - முன்பு உடுத்த கூறையே, கோடி ஆக - கோடிக் கூறையாக, முடித்த கூந்தல் - பின்னிய கூந்தலை, விரிப்பினும் விரிப்பர் - விரித்தாலும் விரிப்பர்.

(பொழி.) மணக்கோலம் பூண்ட மகளிர் அப்பொழுது அவ்விடத்தே கணவர் இறத்தலால் பிணத்திற்குரிய கோலம் பூண்டு, அவருடம்பைத் தழுவி, முன்பு உடுத்த கூறையே கோடியாகப் பூவுடன் முடித்த கூந்தலை விரித்து அழுதாலும் அழுவர்.

கோடி - புது உடை; இறந்த உடம்பிற்கு இடும் உடை; மங்கலநாண் இழந்த மகளிர் உடுக்கும் உடை. "மன்றங் கறங்க மணப்பறை யாயின" என்னும் நாலடியார் செய்யுள் இந்நிலையாமையை உணர்த்துவது.

ருஎ. இல்லோ ரிரப்பது மியல்பே இயல்பே.

(பத.) இல்லோர் - பொருளில்லாதவர், இரப்பதும் - யாசிப்பதும், இயல்பே இயல்பே - இயற்கையே இயற்கையே.

(பொழி.) வறியவர் இரப்பது இயற்கையே யன்றிப் புதுமையன்று.

இரப்பதும் என்பதிலுள்ள உம்மையும் பின் ஈவதும் என்பதிலுள்ள உம்மையும் ஒன்றையொன்று தழுவியுள்ளன. அடுக்கு வற்புறுத்தலைக் குறித்தது.

ருஅ. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.

(பத.) இரந்தோர்க்கு - யாசித்தவருக்கு, ஈவதும் - கொடுப்பதும், உடையோர் கடனே - பொருளுடையவர் கடமையே.

(பொழி.) வறியராய் இரப்பவர்க்கு ஈவது பொருளுடையவர் கடமையே.

இவ்விரு வாக்கியத்தும் ஏ தேற்றம்.

ருகூ. நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை யில்லில் லோர்க்கே.

(பத.) நல்ல ஞாலமும் - நல்ல பூவுலகையும், வானமும் - வானுலகையும், பெறினும் - பெற்றாலும், எல்லாம் - அவை யாவும், இல் - (மாண்புள்ள) மனைவியரை, இல்லோர்க்கு - இல்லாதவர்க்கு, இல்லை - இல்லையாம்.

(பொழி.) பூவுலகத்தையும் தேவருலகத்தையும் பெற்றாலும் மாண்புள்ள மனைவி யில்லாதவர்க்கு அவற்றால் யாதும் பயனில்லை. ஏ - அசை.

சூo. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

(பத.) தறுகண் - அஞ்சாமையையுடைய, யானை - யானையானது, தான் பெரிது ஆயினும் - தான் பெரிய உருவத்தை உடையதாயினும், சிறு கண் - சிறிய கணுக்களையுடைய, மூங்கில் கோற்கு - மூங்கில் கோலுக்கு, அஞ்சும் - அஞ்சாநிற்கும்.

(பொழி.) அஞ்சாமையுடைய யானை உருவத்தாற் பெரிய தாயினும் சிறிய கணுக்களையுடைய மூங்கிற்கோலுக்கு அஞ்சும்.

வலிமையும் பெருமையு முடையவரும் தம்மை யாள்வோர் சிறியர் (இளைஞர்) ஆயினும் அவருக்கு அஞ்சி நடப்பர் என்னுங் கருத்தை அடக்கிக்கொண்டிருப்பது இது. கோற்கும் என்னும் உம்மை தொக்கது. ம் - விரித்தல் விகாரம். ஏ - அசை.

சூக. குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புனறலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.

(பத.) குன்று உடை - மலைகளையுடைய, நெடுங் காடு ஊடே - நீண்ட காட்டினுள்ளே, வாழினும் - வாழ்ந்தாலும், புல் தலை - சிறிய தலையையுடைய, புல் வாய் - மானானது, புலிக்கு அஞ்சும் - புலிக்கு அஞ்சாநிற்கும்.

(பொழி.) மானானது மலைகளையுடைய பெரிய காட்டிற்குள் வாழ்ந்தாலும் புலிக்கு அஞ்சும்.

சூஉ. ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகவஞ் சும்மே.

(பத.) ஆரை ஆம் - ஆரைப்பூண்டு படர்ந்த, பள்ளத்து ஊடே - ஆழத்தினுள்ளே, வாழினும் - வாழ்ந்தாலும், தேரை -

தேரையானது, பாம்பிற்கு - பாம்பினுக்கு, மிக அஞ்சும் - மிகவும் அஞ்சாநிற்கும்.

(பொழி.) தேரையானது ஆரைப்பூண்டு நிறைந்த பள்ளத்தில் வாழ்ந்தாலும் பாம்பிற்கு மிக அஞ்சும்.

இவ்விரண்டு வாக்கியங்களும், வீரரல்லாதவர் எவ்வகை அரணுக்குள் இருப்பினும் வீரருக்கு அஞ்சுவர் என்னுங் கருத்தை அடக்கிக்கொண் டிருக்கின்றன. ஆரை - நீரிற் படர்வதொரு கீரைப்பூண்டு.

௩௩. கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே.

(பத.) கொடுங்கோல் மன்னர் - நீதியில்லாத அரசர், வாழும் நாட்டில் - வாழுகின்ற நாட்டைப் பார்க்கிலும், கடும் புலி வாழும் - கொடிய புலி வாழ்கின்ற, காடு நன்று - காடு நல்லது.

(பொழி.) கொடுங்கோ லரசர் ஆட்சிபுரியும் நாட்டிலிருப்பதைப் பார்க்கிலும் கொடிய •புலிவாழுங் காட்டிலிருப்பது நல்லது.

அவ்வரசர் நாட்டிலே குடிகளுக்கு அச்சமும் கவலையும் அளவின்றியிருக்கு மென்க.

௩௪. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேய நன்றே.

(பத.) சான்றோர் இல்லா - பெரியோர் இல்லாத, தொல்பதி – பழமையாகிய நகரத்தில், இருத்தலின் – குடியிருப்பதைப் பார்க்கிலும், தேன் தேர் - தேனை ஆராய்ந்து திரியும், குறவர் - குறவருடைய, தேயம் - மலைநாட்டில் இருப்பது, நன்று - நல்லது.

(பொழி.) அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியோர் இல்லாத புராதன நகரத்தில் இருப்பதைப் பார்க்கிலும் குறவர் வசிக்கும் மலைப்பக்கத்தில் இருப்பது நல்லது.

அப்பதியி லிருப்போர்க்கு இம்மை மறுமை யின்பங்கள் இல்லையா மென்க. ஏ - அசை. இரண்டிலும் ஏ தேற்றமுமாம்.

௩௫. காலையு மாலையு நான்மறை யோதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே.

(பத.) காலையும் மாலையும் - காலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும், நான்மறை - நான்கு வேதங்களையும், ஓதா - ஓதாத,

அந்தணர் என்போர் அனைவரும் - மறையோர் என்று சொல்லப் படுவோர் எல்லாரும், பதரே - பதரேயாவர்.

(பொழி.) காலையிலும் மாலையிலும் வேதம் ஓதாத அந் தணரென்று சொல்லப்படுவோர் அனைவரும் பதர்போலப் பய னில்லாதவரே யாவர்.

நான்மறை : இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்பன; வேறு வகையாகவும் கூறுவர். பதர்போல ஒதுக்கத்தக்கவ ரென்க. ஏ - தேற்றம் ; பின் வருவனவும் அது.

௬௬. குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை யிறைவனு மூர்க்கனும் பதரே.

(பத.) குடி அலைத்து - குடிகளை வருத்தி, இரந்து - பொருள் வாங்கி, வெங்கோலொடு நின்ற - கொடுங் கோலொடு பொருந்தி நின்ற, முடி உடை இறைவன் ஆம் - கிரீடத்தை யுடைய அரசனாகிய, மூர்க்கனும் - கொடியவனும், பதரே - பதரே யாவன்.

(பொழி.) கொடுங் கோலனாய்க் குடிகளை வருத்திப் பொருள் வாங்கும் தீய அரசனும் பதர்போல்பவனேயாவன். அரசர்களுக்குள் அவன் பதர் என்றுஞ் சொல்லலாம்.

௬௭. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

(பத.) முதல் உள - முதலாகவுள்ள, பண்டம் கொண்டு - பொருளை வைத்துக்கொண்டு, வாணிபம் செய்து - வியாபாரஞ் செய்து, அதன் பயன் - அதனால் வரும் இலாபத்தை, உண்ணு - அநுபவியாத, வணிகரும் - வைசியரும், பதரே - பதரே யாவர்.

(பொழி.) முதற்பொருளை வைத்துக்கொண்டு வாணிகஞ் செய்து அதனால் வரும் இலாபத்தை அநுபவியாத வணிகரும் பதரே யாவர்.

முதலை யிழத்தல் கூடா தென்க.

௬௮. வித்து மேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.

(பத.) வித்தும் - விதையும், ஏரும் - (உழுதற்குரிய) ஏரும், உளவாய் இருப்ப - உள்ளனவாகி யிருக்கவும், அங்கு - அவ் விடத்தில், எய்த்து இருக்கும் - இளைத்திருக்கும், ஏழையும் - அறிவில்லாதவனும், பதரே - பதரே யாவன்.

(பொழி.) விதையும் ஏரும் இருக்கவும் உழுது பயிரிடாமற் சோம்பியிருக்கும் அறிவிலியாகிய வேளாளனும் பதரேயாவன். அங்கு, அசையுமாம்.

௬௯. தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவட் பாராப் பேதையும் பதரே.

(பத.) தன் மனையாளை - தன் மனைவியை, தாய் மனைக்கு - (அவளது) தாய் வீட்டிற்கு, அகற்றி - போக்கி, பின்பு - பின்னே, அவள் பாரா - அவளை நோக்காதிருக்கிற, பேதையும் - அறிவில்லாதவனும் பதரே - பதராவன்.

(பொழி.) தன் மனைவியைப் பிறந்தகத்திற்குப் போக்கி விட்டுப் பின்பு அவளை யேற்றுக்கொள்ளாமலே யிருக்கிற அறிவில்லாதவனும் ஆடவருள் பதராவன்.

௭0. தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்
பிறர்மனைக் கேகும் பேதையும் பதரே.

(பத.) தன் மனையாளை - தனது மனைவியை, தனி-தனியே, மனை இருத்தி - வீட்டில் இருக்கச்செய்து, பிறர் மனைக்கு - பிறர் வீட்டுக்கு, ஏகும் - செல்லுகின்ற, பேதையும் - அறிவில்லாதவனும், பதரே - பதரே யாவன்.

(பொழி.) தன் மனைவியை வீட்டில் தனியே இருக்கச் செய்து பிறர் மனைவியை விரும்பி அயல் வீட்டுக்குச் செல்லும் அறிவில்லாதவனும் பதரே யாவன்.

௭௧. தன்னு யுதமுந் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே

(பத.) தன் ஆயுதமும் - தனது தொழிற்குரிய கருவியையும், தன் கையில் பொருளும் - தனது கையிலுள்ள பொருளையும், பிறன் கையில் கொடுக்கும் - அயலான் கையில் கொடுத்திருக்கும், பேதையும் - அறிவிலானும், பதரே - பதரே யாவன்.

(பொழி.) தன் தொழிற் கருவியையும் தன் கைப்பொருளையும், பிறர் கையில் கொடுத்துவிட்டுச் சோம்பியிருக்கின்ற அறிவில்லாதவனும் பதரே யாவன்.

தன் ஆயுதத்தையும் பொருளையுங் கொண்டு தொழில் செய்ய வேண்டுமென்க. பிறர் என்பதற்கு ஒரு சம்பந்தமு மில்லாதவர் என்றும் கூறலாம்.

எஉ. வாய்ப்பறை யாகவு நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

(பத.) வாய் பறை ஆகவும் - வாயே பறையாகவும், நா கடிப்பு ஆகவும் - நாவே குறுந்தடியாகவும் (கொண்டு), சாற்றுவது ஒன்றை - (அறிவுடையோர்,) சொல்லுவது ஒன்றை, போற்றி - (மனம் புறம் போகாமல்) பாதுகாத்து, கேண்மின் - கேளுங்கள்.

(பொழி.) வாயே பறையாகவும் நாவே குறுந்தடியாகவுங் கொண்டு அறிவுடையோர், சாற்றுகின்ற உறுதிமொழியைக் குறிக் கொண்டு கேளுங்கள்.

கடிப்பு - பறையடிக்குங் கோல். சான்றோர்கள் பறை சாற்றுவதுபோல உலகத்தார்க்கு உறுதிப்பொருளை அறிவுறுத்துவ ரென்க.

எங. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

(பத.) பொய் உடை ஒருவன் - பொய்ம்மையுடைய ஒருவன், சொல்வன்மையினால் - வாக்கு வன்மையால், மெய்போலும் மெய்போலும் - (அவன் கூறும் பொய்) மெய்யே போலும் மெய்யே போலும்.

(பொழி.) பொய்ம்மையுடைய ஒருவன் கூறும் பொய் மொழி அவன் பேச்சு வன்மையால் உண்மை போலவே தோன்றக்கூடும்.

சொற் சாதுரியத்தில் மயங்கிப் பிறர் கூறும் பொய்யை மெய்யென்று கொள்ளலாகா தென்க. இருமுறை கூறியது வற்புறுத்துதற்கு. ம் - விரித்தல். மேல் வருவதற்கும் இங்ஙனம் உரைத்துக்கொள்க.

எச. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

(பத.) மெய் உடை ஒருவன் - மெய்ம்மையுடைய ஒருவன், சொலமாட்டாமையால் - (திறம்படச்) சொல்லமாட்டாமையால், பொய்போலும் பொய்போலும் - (அவன் கூறும் மெய்) பொய்யே போலும் பொய்யேபோலும்.

(பொழி.) உண்மையுடைய ஒருவன் கூறும் மெய்ம் மொழி அவனது சொல்வன்மை யின்மையால் பொய்போலத் தோற்றக் கூடும்.

௭௫. இருவர்தஞ் சொல்லையு மெழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த வுரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தா
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.

(பத.) இருவர் தம் சொல்லையும் - (வாதி எதிரி யென்னும்) இருவருடைய சொற்களையும், எழுதரம் கேட்டு - எழுமுறை கேட்டு (உண்மையுணர்ந்து), மனுமுறை நெறியின் - மனுநீதி வழியால், இருவரும் பொருந்த - இருவரும் ஒத்துக்கொள்ள, உரையார் ஆயின் - (முடிவு) சொல்லாரானல், வழக்கு இழந்தவர் தாம் - (நீதியின்றி) வழக்கினை யிழந்தவர், மனம் - மனமானது, உற மறுகி நின்று - மிகவுங் கலங்கி நின்று, அழுத கண்ணீர் - அழுத கண்ணீரானது, முறை உற - முறையாக, தேவர் மூவர் - மூன்று தேவர்களும், காக்கினும் - காத்தாலும், வழிவழி - (அவர்) சந்ததி முழுதையும், ஈர்வது - அறுப்பதாகிய, ஓர் வாள் ஆகும் - ஒரு வாட்படை யாகும்.

(பொழி.) இரு திறத்தினர் சொல்லையும் எழு முறை கேட்டு ஆராய்ந்து உண்மை யுணர்ந்து நீதி வழுவாது இருவரும் மனம் பொருந்தும்படி முடிவு சொல்லாராயின், அநீதியாக வழக்கிலே தோல்வியுற்றவர் மனங்கலங்கி நின்று அழுத கண்ணீரானது அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்தியும் முறையாகப் பாதுகாத்தாலும் முடிவு கூறியவரின் சந்ததி முழுதையும் அறுக்கின்ற வாளாகும்.

இது நீதி செலுத்தற்குரிய அவையினரும் நீதிபதியும் அரசனும் என்பவர்களை நோக்கிக் கூறியது. சொல்வன்மையாலும் சொலமாட்டாமையாலும் பொய் மெய்யாகவும், மெய் பொய்யாகவும் தோன்றக்கூடுமாகலின் 'எழுதரங் கேட்டு' என்றார். எனத் தேவரும் மூவரும் என்று கூறினும் பொருந்தும், முற்றும்மை தொக்கது. தம், தாம் என்பன சாரியை ம் விரித்தல்.

"அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை" என்னுந் திருக்குறளில் இதன் கருத்து அமைந்துளது.

௭௬. பழியா வருவது மொழியா தொழிவது.

(பத.) பழியா வருவது - நிந்தையாக வருங் காரியம், மொழியாது ஒழிவது - பேசாது விடத்தகுவது.

(பொழி.) பின் பழியுண்டாகுஞ் செய்தியைப் பேசாது விடவேண்டும்.

பழியாக என்பது ஈறு கெட்டது.

எஎ. சுழியா வருபுன லிழியா தொழிவது.

(பத.) சுழியா - சுழித்து, வரு புனல் - வருகின்ற வெள்ளத்திலே, இழியாது ஒழிவது - இறங்காது தவிர்க.

(பொழி.) சுழித்து வருகின்ற நீர்ப் பெருக்கிலே இறங்காது ஒழிக.

உயிர்க்கிறுதி விளைக்கும் காரியத்திற் புகலாகா தென்க. சுழியா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஒழிவது - வியங்கோள்.

எஅ. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

(பத.) துணையோடு அல்லது - துணையினோடல்லாமல், நெடுவழி - தூரவழியில், போகேல் - செல்லாதே.

(பொழி.) தூரமான இடத்திற்குத் துணையின்றிப் போகாதே.

எகூ. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

(பத.) புணைமீது அல்லது - தெப்பத்தின்மேல் அல்லாமல், நெடும் புனல் - பெரிய வெள்ளத்தில், ஏகேல் - செல்லாதே.

(பொழி.) தெப்பமின்றிப் பெருவெள்ளத்திற் செல்லாதே. பிறவியைக் கடக்கலுறுவார்க்குத் தக்க துணையும் பற்றுக்கோடும் வேண்டு மென்க.

அ0. எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல்வா காதே.

(பத.) எழில் ஆர் முலை - அழகு பொருந்திய தனங்களையும், வரி விழியார் - நீண்ட கண்களையும் உடைய மாதர்களின், தந்திரம் - உபாயங்களுள், இயலாதன - பொருந்தாதனவற்றை, கொடு — கைக்கொண்டு, முயல்வு ஆகாது - முயலுதல் கூடாது.

(பொழி.) மாதர்மேல் வைத்த காதலால் அவர் கூறும் உபாயங்களிற் பொருந்தாதனவற்றை மேற்கொண்டு முயலுதல் கூடாது.

வரி - இரேகையுமாம். தந்திரம் என்ற பாடமிருப்பின் அவர் விடயத்தில் என்று பொருள் கொள்க.

௮௧. வழியே யேகுக வழியே மீளுக.

(பத.) வழியே ஏகுக - (செவ்விய) வழியிலே செல்க, வழியே மீளுக - (செவ்விய) வழியிலே திரும்புக.

(பொழி.) நேர்மையான வழியிலே செல்க, நேர்மையான வழியிலே திரும்புக.

யோகப் பயிற்சி செய்வோர் சுழிமுனையாகிய வழியிலே சென்று திரும்பிப் பயிலுக என்றும், பிறவாறும் இதற்குக் கருத்துரைத்தலும் ஆம்.

௮௨. இவைகா ணுலகிற் கியலா மாறே.

(பத.) இவை - இவைகள், உலகிற்கு - உலகிலுள்ளோர்க்கு, இயல் ஆம் - நடத்தற்குரிய, ஆறு - நன்னெறிகளாம்.

(பொழி.) இந்நூலிற் கூறிய இவையெல்லாம் உலகத்தார் நடத்தற்குரிய நல்ல வழிகளாம்.

இந்நூலிற் சொல்லிவந்த நீதிகளெல்லாம் 'இவை' எனத் தொகுத்துச் சுட்டப்பட்டன. காண் - முன்னிலையசை.

நறுந்தொகை மூலமும் உரையும்

முற்றிற்று.